(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 250.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2018 ஏப்ரல் 03 செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1230/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பேணல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1419/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தின் 195 ஆம் இலக்க முன்மொழிவுக்கேற்ப, நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் "அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம்" எனும் நிறுவனமொன்று தாபிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் உள்ளடக்கம் மற்றும் பொறுப்புக் கட்டமைப்பு யாதென்பதையும்;

(iii) 1977 முதல் இது வரை இலங்கைக்கு கிடைத்துள்ள மொத்த வெளிநாட்டு முதலீடுகள், முதலீட்டாளர்கள் பெற்றுக்கொண்டுள்ள கடன் உள்ளிட்ட நேரடி வெளிநாட்டு முதலீடுகள், கடனின்றிக் கிடைத்த நேரடி வெளிநாட்டு முதலீடுகள் வருட வாரியாக குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) 2009 இல் யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கையில் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் வளர்ச்சியடைந்த விதத்தை சுட்டிக்காட்டும் தரவுகள் மற்றும் விளக்க வரைபடத்தையும் மற்றும் முன்னுரிமை வரிசைக் கிரமப்படி நேரடி வெளிநாட்டு முதலீடுகளை நாட்டினுள் பாய்ச்சிய பிரதான ஐந்து நாடுகள் யாவையென்பதை குறிப்பிடுவாரா என்பதையும்;

(v) 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1666/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படும் மருத்துவமனைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி மருத்துவமனைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) ஊவா மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர், இதுவரை வழங்கியுள்ள மருத்துவமனை சிற்றூழியர் தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) மேற்படி தொழில்வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொழில்வாய்ப்புகள் வழங்கப்பட்ட மருத்துவமனைகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு பின்பற்றப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2006/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— புத்தசாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தசாசன அமைச்சரின் அமைச்சு அலுவலகங்களின் முகவரிகள் யாவை என்பதையும்;

(ii) அந்த அலுவலகங்களுக்காக வாடகை குத்தகை செலுத்தப்படின் அந்த மாதாந்த வாடகை/ குத்தகை தொகை எவ்வளவென்பதையும்;

(iii) 2015 - 2017 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்டுள்ள மொத்த வாடகை/ குத்தகைத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அமைச்சரின் பிரத்தியேக பதவியணியின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த பிரத்தியேக பதவியணிக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அமைச்சருக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

2115/ '17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின், கண்டாமலை பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய கல்லாறு கிராமத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 143 நிரந்தர வீடுகளும், மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கென பல்வேறு வீடமைப்புத் திட்டங்களின் கீழ் கிடைத்த 100 வீடுகளும் என்றவாறு 243 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) மேற்படி 243 வீடுகளில் இன்றளவில் சுமார் 186 வீடுகளில் மாத்திரம் மக்கள் குடியமர்ந்துள்ளதோடு, எஞ்சிய 57 வீடுகளில் யாரும் குடியேறாத நிலையில் அவை வெற்றிடமாக உள்ளனவென்பதையும்;

(iii) குடிநீர், முறையான போக்குவரத்து சேவைகளை வழங்குதல் மற்றும் வீதி புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் மேற்குறிப்பிட்ட கிராமங்களில் இன்றளவில் குடியேறியுள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக் கிராமத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

(iii) இன்றளவில் வெற்றிடமாக உள்ள வீடுகளை, வீடு இல்லாத குடும்பங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

2137/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்கு உயிரியல் பாடத் துறையில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலிருந்து தோற்றியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையில், பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் எவ்வளவென்பதையும்;

(iii) மருத்துவ பீடத்திற்கான தகைமையை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் எவ்வளவென்பதையும்;

(iv) மருத்துவ பீடத்திற்கான தகைமையை பெற்றுள்ள மாணவன் அல்லது மாணவியின் ஆகக்குறைந்த பெறுபேறு, Z பெறுமதி, கல்வி கற்ற பாடசாலை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மருத்துவ பீடம் யாதென்பதையும்;

ஒவ்வொரு மாவட்டத்தின்படி தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

2184/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2017 ஆம் ஆண்டு மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து வீழ்ந்ததனால்,

(i) உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை;

(ii) அங்கவீனமுற்றோர்களின் எண்ணிக்கை;

(iii) பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட மொத்த நட்டஈட்டுத் தொகை;

(iv) உயிரிழந்த ஒருவருக்குச் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை;

(v) சேதமடைந்த வீடுகளுக்காகச் செலுத்தப்பட்ட அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச நட்டஈட்டுத் தொகை;

எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இடம்பெயர்ந்த அனைவருக்கும் நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இடம்பெயர்ந்த ஒரு குடும்பத்திற்கு நிரந்தர வீடொன்று வழங்கப்பட்ட அண்மித்த திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

2228/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த நாள் தொடக்கம் இதுவரை வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி மீனவர்கள் தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள நாடுகள் யாவை;

(iii) மேற்படி மீனவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை;

(iv) மேற்படி மீனவர்களை விடுவிப்பதற்கு அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) வெளிநாடுகளில் கைதுசெய்யப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பங்களின் நலன்புரிக்காக அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

9.

2294/ '17

கௌரவ ஹேசான் விதானகே,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்த்தில் இயங்கும் இபோச டிப்போக்களில் தற்போது இலாபத்தில் அல்லது நட்டத்தில் இயங்கும் டிப்போக்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இரத்தினபுரி மாவட்டத்தில் ஒவ்வொரு டிப்போவிற்கும் புதிதாக வழங்கப்பட்ட பஸ் வண்டிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு டிப்போவிலும் நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

2326/ '17

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— ஆரம்பக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலேவெல பிரதேசத்தில் இஹல லிக்கல எனும் பெயரில் கிராமமொன்று உள்ளதென்பதையும்;

(ii) இக்கிராமத்தில் பெரும்பான்மையான குடும்பங்கள் செங்கல் தயாரித்து வாழ்க்கையை கொண்டுநடாத்துகின்றனர் என்பதையும்;

(iii) நிலவுகின்ற கடும் வறட்சி, மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டணம் அதிகரித்தல் ஆகியன காரணமாக தற்போது இக்கிராமத்தின் மக்கள் மேற்படி கைத்தொழிலை மேற்கொள்வதில் கடும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைச்சு எடுக்கின்ற நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

2342/ '17

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நாட்டில் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிவாரணங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது நாட்டில் சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற பயனாளிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை எடுத்துள்ளதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் புதிதாக சமுர்த்தி நிவாரணம் வழங்குதல் மற்றும் இடைநிறுத்தல் தொடர்பாக ஏற்புடைய பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) சமுர்த்தி நிவாரணங்களை இடைநிறுத்துவதற்கு ஏற்புடைய பெயர் பட்டியலில் மிக வறிய மற்றும் அங்கவீன ஆட்களும் உள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) இவர்களுக்கு வேறு யாதேனும் நிவாரணம் வழங்கப்படுமா; இன்றேல், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

12.

2370/ '17

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புளூமெண்டல் துறைமுக பிரவேச வழியின் இருமருங்கிலுமுள்ள நிலப்பகுதியை இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கையேற்று கொள்கலன்களை பரிசோதனை செய்ய பயன்படுத்துவதாயிருப்பின், தற்போது கொள்கலன்களை பரிசோதனை செய்வதற்கான பிரிவு அமைந்துள்ள நுகே வீதி நிலையத்தை நோக்கிச் செல்கையில் தோன்றுகின்ற 6/10 மணித்தியாலங்களுக்கிடைப்பட்ட பாரிய தாமதத்தை தவிர்த்துக்கொள்ள இயலுமென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) ஒருசில இறக்குமதியாளர்கள் அவர்களின் களஞ்சியங்கள் வெறுமையாகும்வரை இறக்குமதி செய்துள்ள பண்டங்களை விடுவித்துக்கொள்வதை தாமதம்செய்து தாமதக் கட்டணங்களை செலுத்த நடவடிக்கை மேற்கொள்வது அவர்களுக்கு இலாபமானதென்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், மேலே (i) மற்றும் (ii) சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

2399/ '17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிலவுகின்ற வரட்சி காரணமாக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையினால் இழப்பீடு வழங்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை யாது;

(ii) குருநாகல் மாவட்டத்தில் இவ்வாறு இழப்பீடு வழங்கப்பட்ட விவசாயிகளின் பெயர்ப் பட்டியலை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின்படி வெவ்வேறாக சமர்ப்பிப்பாரா;

(iii) குருநாகல் மாவட்டத்தில் ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) மேற்படி இழப்பீடு வழங்கப்படுகையில் கவனத்திற் கொள்ளப்பட்ட அளவுகோல்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

2464/ '17

கௌரவ இஷாக் ரஹுமான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் வலயக் கல்வி அலுவலகத்திற்குரிய, இல. 309, கம்பிரிஸ்வெவ கிராம அலுவலர் பிரிவு, துலானே, அ/மனாருல் உலூம் மகா வித்தியாலயம் "1000 பாடசாலைகள்" கருத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு பாடசாலை என்பதையும்;

(ii) இப்பாடசாலையில் சுமார் 700 மாணவர்கள் கல்வி பயிலுகின்றார்கள் என்பதையும்;

(iii) இக்கருத்திட்டத்தின் கீழ் இப்பாடசாலைக்கு ஒரு கட்டடம் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் இற்றைவரை வேறெந்த வசதிகளும் வழங்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) "அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" எனும் கருத்திட்டத்தின் கீழேனும் இந்த பாடசாலைக்கு தேவையான வசதிகள் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— தேசிய கணக்காய்வு,— கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கும்; தேசிய கணக்காய்வு அலுவலகத்தையும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவையையும் தாபிப்பதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும்; பகிரங்க நிதி மீது கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பங்களிப்பைக் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவு (திருத்தம்),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

3.

நீதி அமைச்சர்,— காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்),— 2016 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

4.

கௌரவ நாமல் ராஜபக்ஷ,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"சாயா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 06 ஆம் திகதிய 2044/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 07 ஆம் திகதிய 2044/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 08 ஆம் திகதிய 2044/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 20 ஆம் திகதிய 2046/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 டிசம்பர் 13 ஆம் திகதிய 2049/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 டிசம்பர் 14 ஆம் திகதிய 2049/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.7),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 டிசம்பர் 31 ஆம் திகதிய 2051/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.8),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.9),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 31 ஆம் திகதிய 2056/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.10),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2018 பெப்ரவரி 15 ஆம் திகதிய 2058/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— ஹைட்ரோபுளோரொகாபனை (Hydroflurocarbons –HFC) கட்டங் கட்டமாக குறைத்தல் சம்பந்தமாக மொன்ட்ரியெல் கூட்டமைப்பு மேற்கொண்ட கிகாலி திருத்தத்திற்கு இலங்கை இணங்கிச் செயற்படல் தொடர்பான பிரேரணை நிறைவேற்றம்,— பூகோள வெப்பமடைதலைக் குறைப்பதற்காக மொன்ட்ரியல் அமைப்பினால் 1990 இல் இலண்டன் திருத்தம், 1992 கோபன்ஹேகன் திருத்தம், 1997 மொன்ட்ரியல் திருத்தம், 1999 பீஜிங் திருத்தம் என பல்வேறு இலக்குகளை அடைந்துகொள்வதற்காக நான்கு சந்தர்ப்பங்களில் திருத்தங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கை உரிய காலப் பகுதிகளில் அந்தத் திருத்தங்களுக்கு இணங்கிச் செயற்பட்டுள்ளதாலும்;

2016 ஆம் ஆண்டின் திருத்தமாக கிகாலி திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதனூடாக 2050 ஆண்டாகும்போது காபனீரொட்சைட் வாயு 100 பில்லியன் தொன்னுக்கு சமமான பூகோள வெப்பமடைதலுக்கு பங்களிப்புச் செலுத்தும் குளிர்பதனப் பொருட்களை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கான வாய்ப்புக் கிடைப்பதனால் பூகோள வெப்பத்தை 0.5 பாகை செல்சியஸால் அதிகரிப்பதனைக் தடுப்பதற்கான வாய்ப்பு உருவாகின்றமையினாலும்;

அரசியலமைப்பின் 33(2) (ஏ) இன் கீழ் அரசியலமைப்பின் அல்லது வேறு ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது ஏற்பாடுகளுக்கு முரண்படாத சர்வதேச சட்டம், பழக்க வழக்கங்கள் அல்லது பயன்பாட்டிற்கமைய நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடைத்துள்ளதனால் கிகாலி திருத்தத்திற்கு இணக்கம் தெரிவித்தல் ஜனாதிபதியின் தனிச் சிறப்பு அதிகாரத்திற்குட்பட்ட விடயமாகுமென்பதாலும்;

அரசியலமைப்பின் 33அ உறுப்புரையின் கீழ் பொது மக்கள் பாதுகாப்பு சம்பந்தமாக அக்காலப் பகுதியில் செயல்வலுவிலிருந்த சட்டம் உட்பட ஏதேனும் எழுத்து மூல சட்டத்தின் கீழ் சுயாதீன அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் பொறுப்புக்களை உரிய பிரகாரம் செயற்படுத்தல் மற்றும் உரிய பிரகாரம் நிறைவேற்றுதல் சம்பந்தமாக ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறல் வேண்டுமென்பதாலும்;

2017 செப்டெம்பர் 29 ஆம் திகதி சனாதிபதி அவர்கள் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் என்ற ரீதியில் சமர்ப்பித்த அமைச்சரவை நிருபம் தொடர்பாக எடுக்கப்பட்ட 2017 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய மொன்ட்ரியல் அமைப்பின் புதிய திருத்தமான கிகாலி திருத்தத்திற்கு இணங்கிச் செயற்படுவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளமையினாலும்;

அதன் பிரகாரம், அரசியலமைப்பின் 33அ உறுப்புரைக்கு இணங்கி சனாதிபதி அவர்களின் பிரேரணையொன்றாக ஹைட்ரோபுளோரொகாபனை கட்டங் கட்டமாக குறைத்தல் சம்பந்தமாக மொன்ட்ரியல் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கிகாலி திருத்தம் தொடர்பில் இலங்கை இணங்கிச் செயற்படுவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

* 12.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 8, 14 மற்றும் 30 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகன (கட்டண) ஒழுங்குவிதிகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 15 ஆம் திகதிய 2054/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 143 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகன (கடுகதிப் பாதை) ஒழுங்குவிதிகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 15 ஆம் திகதிய 2054/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 215 அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் உடனடியான குற்றப்பணத்தொகை ஒழுங்குவிதிகள் தொடர்பில் போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 சனவரி 15 ஆம் திகதிய 2054/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 15.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 17.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 யூன் 16 ஆம் திகதிய 1867/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைத் திருத்தி 2017 திசெம்பர் 29 ஆம் திகதிய 2051/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 மார்ச் 16 ஆம் திகதிய 2062/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் திருத்தப்பட்ட 2017 திசெம்பர் 15 ஆம் திகதிய 2049/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மாகாண சபைகளின் தேர்தல் தொகுதி எல்லைகளை நிர்ணயிப்பதற்கான குழுவின் அறிக்கை,— 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 3அ. (11) ஆம் பிரிவின் பிரகாரம் எல்லை நிர்ணயக் குழுவினால் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமான அக்குழுவின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

* 24.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புச் சபையின் விதப்புரைக்கமைய 2015.11.27 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாதலாலும்;

சனாதிபதியவர்களினால் 2017.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2017.12.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு பின்வருமாறு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்:—

(அ) 2015.11.27 ஆம் திகதி முதல் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கமைய SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் 08 ஆவது படிநிலையில் இருத்தி சம்பளத்தைச் செலுத்தல் மற்றும் பதவிக்குரித்தான ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும்;

(ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இற்கமைய 2016.01.01 ஆம் திகதி முதல் சம்பளத்தை மாற்றியமைக்கும்போது SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளத்தை மாற்றியமைத்துச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) அச்சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வருடாந்த சம்பள ஏற்றத்தைச் செலுத்துவதற்கும்.

அதற்கேற்ப, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* 25.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 26.

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 27.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

30.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.